வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

தேதி 06.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

**நாட்டிற்கே முதலிடம்** என்ற, பாரதீய ஜனதாவின் வளர்ச்சிப் பார்வையை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேர்வு குறித்த மாணவர்களின் அச்சத்தை போக்குவதற்கான, பிரதமரின் **பரிக்ஷா பே சர்ச்சா** கலந்துரையாடல் நிகழ்ச்சி, வரும் 10ஆம் தேதி புதுடெல்லி **பாரத் மண்டபத்**தில் நடைபெற உள்ளது.

சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுவது, சர்வதேச உறவுகளில் பொதுவாக ஏற்கப்பட்ட கொள்கைதான் என்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 35ஆவது **காய்- கனி மற்றும் மலர்க் கண்காட்சி**யை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், நாளை தொடக்கி வைக்கிறார்.

----------------------------

மோடி பதில் (17)

**நாட்டிற்கே முதலிடம்** என்ற, பாரதீய ஜனதாவின் வளர்ச்சிப் பார்வையை மக்கள் நன்கு புரிந்து கொண்டே, 3ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு தங்களை தேர்ந்தெடுத்ததாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். குறிப்பிட்ட குடும்பத்தை மட்டுமே முன் நிறுத்தும் காங்கிரஸ் கட்சிக்கு, **அனைவருக்குமான வளர்ச்சி** என்பதை புரிந்து கொள்ளவோ, ஏற்கவோ முடியாது என்று அவர் இன்று மாநிலங்களவையில், குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதங்களுக்கு, பதில் அளித்து பேசுகையில் கூறினார். சமூகத்தில் ஜாதி அடிப்படையில் பிளவைப் பரப்ப, தற்போது முயற்சிகள் நடப்பதாக, பிரதமர் கூறினார். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஓபிசி எம்பிக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, **ஓபிசி ஆணைய**த்திற்கு சட்ட அந்தஸ்து வழங்கியது, பிஜேபி அரசுதான் என்று அவர் கூறினார். காங்கிரஸ் எப்போதும் அண்ணல் அம்பேத்கருக்கு எதிராகவே செயல்பட்டு வந்திருப்பதாகவும், இதற்கு ஆவண ரீதியிலான ஆதாரங்கள் உண்டு என்றும் பிரதமர் குறிப்பிட்டார். நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் திருமதி

திரௌபதி முர்மு ஆற்றிய உரை மீதான விவாதங்களுக்கு, பிரதமர் ஏற்கனவே, மக்களவையில் பதில் அளித்ததும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*மோடி-தேர்வு (17)*

தேர்வு குறித்த மாணவர்களின் அச்சத்தை போக்கி, வாழ்க்கையை **உற்சவமாக** கொண்டாடும் உணர்வை மாணவர் மனங்களில் விதைக்கும் நோக்கிலான, பிரதமரின் **பரிக்ஷா பே சர்ச்சா** கலந்துரையாடல் நிகழ்ச்சி, வரும் 10ஆம் தேதி புதுடெல்லி **பாரத் மண்டபத்**தில் நடைபெற உள்ளது. இவ்வாண்டு இந்நிகழ்ச்சி புதிய வடிவத்தில் நடைபெறும் என்றும், பிரதமரின் **பரிக்ஷா பே சர்ச்சா** நிகழ்ச்சியில், இம்முறை, பல்வேறு துறைகளைச் சேர்ந்த புகழ் பெற்ற அறிஞர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடி, தங்களின் அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள இருப்பதாகவும், மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. நிகழ்ச்சியின் முதல் அங்கமாக, பிரதமர் திரு, நரேந்திர மோடி மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்த இருக்கிறார். பிரதமருடன் நேரடியாக கலந்துரையாட, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 36 மாணவர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தூர்தர்ஷன் தொலைகாட்சியிலும், **ஸ்வயம்**, **ஸ்வயம் பிரபா**, மற்றும், பிரதமர் அலுவலகத்தின் **யு-டியூப்** அலைவரிசைகளிலும் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒளிப்பரப்பாகும்.

----------------------------

*ஜெய்சங்கர்* (18)

சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுவது, சர்வதேச உறவுகளில் பொதுவாக ஏற்கப்பட்ட கொள்கைதான் என்றும், சட்டப்பூர்வ குடியேற்றங்களை ஊக்குவிப்பதே, ஒட்டு மொத்தமாக அனைவருக்குமே நல்லது என்றும் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இந்திய குடிமக்கள் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்டது குறித்து இன்று மாநிலங்களவையில் அறிக்கை வெளியிட்ட அவர், ஒரு நாட்டின் மக்கள், மற்ற நாடுகளில், சட்டவிரோத முறையில் வசிப்பதாக தெரிய வந்தால், சொந்த நாடே அவர்களை திரும்ப எடுத்துக் கொள்வது கட்டாயம் என்றார். சட்டவிரோத குடியேறிகளின் வெளியேற்றம், சிவிலியன் மற்றும் ராணுவ விமானங்கள் மூலமாக தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தானே தவிர, புதியதல்ல என்று, அவர் தெரிவித்தார். இதர நாடுகளில் இருந்து, 2009ஆம் ஆண்டில், 734 பேரும், 2024ஆம் ஆண்டில் ஆயிரத்து 368 பேரும், இந்தியாவிற்கு வெளியேற்றப் பட்டதாக தெரிவித்த அவர், நடப்பாண்டில் இந்த எண்ணிக்கை, 104ஆக இருப்பதாக கூறினார். அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படும் இந்தியர்கள், சரியான முறையில் நடத்தப் படுவதை உறுதிப்படுத்துவது குறித்து, இந்திய அரசு, அமெரிக்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சர் மேலும் கூறினார்.

----------------------------

*ஜெய்சங்கர்-மாணவர் (13)*

இந்தியாவிற்கு வெளியே பயிலும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்கு, அரசு முன்னுரிமை அளிப்பதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், பிணக்குப் பகுதிகளில் இருந்து திரும்பி உள்ள மாணவர்களின் நலன்களை பாதுகாக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக தெரிவித்தார். உக்ரைனில் மருத்துவம் பயின்ற இந்திய மாணவர்கள், கல்வியின் எஞ்சிய பகுதியை, வேறு 3ஆவது நாட்டிற்கு மாற்றிக் கொள்ளவும், செயல் முறைத் தேர்வுகளை இந்தியாவில் எழுதவும் அனுமதிக்கப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். நாட்டில், கடந்த 10 ஆண்டுகளில், புதிதாக 75 ஆயிரம் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் சேர்க்கப் பட்டுள்ளதால், பிணக்குப் பகுதிகளில் பயின்றவர்கள் உட்பட, எல்லா மாணவர்களுக்கும் பல வாய்ப்புகள் உருவாகி இருப்பதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

---------------------------

*மலர் கண்காட்சி* 1 (13)

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 35ஆவது காய்- கனி மற்றும் மலர்க் கண்காட்சியை, தாவரவியல் பூங்காவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், நாளை தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் நடைபெற உள்ள தொடக்க விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. செல்வகணபதி, திரு. வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி மற்றும் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்.

இந்த 3 நாள் கண்காட்சிக்கான எல்லா ஏற்பாடுகளையும், வேளாண் துறை விரிவான முறையில் செய்து முடித்துள்ளது. கண்காட்சியில் இடம்பெற பெங்களூர், புனே உள்ளிட்ட இடங்களில் இருந்து, பல வண்ணப் பூச்செடிகள், ஆயிரக்கணக்கில் வரவழைக்கப் பட்டுள்ளன. ஏற்பாடுகள் குறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*மலர் கண்காட்சி* 2 (4)

35ஆவது காய்-கனி மற்றும் மலர் கண்காடசியின் நிறைவு விழா, வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி இவ்விழாவில் கலந்து கொண்டு, வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்குவார் என்றும், வேளாண் துறை தெரிவித்துள்ளது.

---------------------------

*தட்சணாமூர்த்தி* (6)

மத்திய அரசால் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப் பட்டுள்ள புதுச்சேரியைச் சேர்ந்த தவில் கலைஞர் திரு. தட்சணாமூர்த்தி, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமியை

சந்தித்து, விருதுக்கு தம்மை பரிந்துரை செய்தமைக்கு, நன்றி தெரிவித்துக் கொண்டார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, சட்டப் பேரவைத் தலைவர் ஆர். செல்வம் உடன் இருந்தார்.

----------------------------

*நமச்சிவாயம்* (9)

புதுச்சேரியில், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், தமது துறைகள் மூலமான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். புதிய காவல் நிலையங்களை திறப்பது குறித்தும், கிராமப் புறங்கள் மற்றும் நகர்ப் புறங்களில், விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கல்வித் துறை இயக்குனர் திருமதி பிரியதர்ஷினி, முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு. அனிதா ராய், விளையாட்டுத் துறை துணை இயக்குநர் திரு. வைத்தியநாதன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

----------------------------

*மதுக்கடை (5)*

வள்ளலார் ஜோதி தினமான வரும் 11ஆம் தேதி செவ்வாய் கிழமை, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் உள்ள, அனைத்து கள்-சாராயக் கடைகள், மற்றும், மதுக் கடைகள், மூடப்பட்டிருக்க வேண்டும் என, கலால் துறை உத்தரவிட்டுள்ளது. இதை மீறுவோர் மீது, சட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், எச்சரிக்கப் பட்டுள்ளது.

----------------------------

*புதுச்சேரி போராட்டம்* (6)

மத்திய பட்ஜெட், மக்களுக்கும், விவசாயிகளுக்கும் எதிராக அமைந்து இருப்பதாகக் கூறியும், அதை கண்டித்தும், இன்று புதுச்சேரியில், அனைத்து தொழிற்சங்க அமைப்பினர், சுதேசி பஞ்சாலை அருகே, ஆர்பாட்டம் மேற்கொண்டனர். இப்போராட்டத்தில் பட்ஜெட் நகலை சிலர் எரித்த போது, போலீசார் தண்ணீரை ஊற்றி, தீயை அணைத்தனர். போலீசாருக்கும், ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் இடையே, லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

----------------------------

*சிந்தியா-பழங்குடி* (13)

நாட்டில் பழங்குடிப் பகுதிகளில், தொலை தொடர்பு உட்பட எல்லா வசதிகளையும் மேம்படுத்தி, முழுமையான வளர்ச்சியை கொண்டு வர, அரசு சிறப்பு முக்கியத்துவம் அளிப்பதாக, மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், 25 ஆயிரம் பழங்குடி கிராமங்களில் அமலாகும் பிரதமரின் ஜன்-மன் திட்டத்தின் கீழ், தொலை தொடர்பு வசதிகளுக்கு மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம், குடிநீர், துப்புரவு உள்ளிட்ட எல்லா வசதிகளுக்கும் முக்கிய கவனம்

செலுத்தப் படுவதாக கூறினார். ஆய்வு ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆயிரத்து 590 பழங்குடி கிராமங்களில், ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட தொலை தொடர்பு கோபுரங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டு, இத்தகைய 519 கோபுரங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டதாக, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

----------------------------

*கும்பமேளா* (17)

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவின் ஒருபகுதியாக, பழங்குடி கலாச்சார கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 5 நாள் **பழங்குடி இளைஞர் கும்பமேளா**வில், நாடெங்கிலும் இருந்து, 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடி இளைஞர்கள் பங்கேற்றுள்ளனர். மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. **துர்காதாஸ் உய்க்கி** இவ்விழாவில் பேசுகையில், புரட்சிகரமான மாற்றங்களை நாட்டில் கொண்டுவர, இளைஞர்களால் மட்டுமே முடியும் என்றும், இளைஞர்கள், நாட்டின் சுயசார்பு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு பாடுபட வேண்டும் என்றும் கூறினார். பழங்குடிக் கலாச்சாரம் மற்றும் மரபுகளை பாதுகாக்க, பழங்குடி இளைஞர்கள் இவ்விழாவின் போது உறுதியேற்றனர். பழங்குடி சமூகத்தினருக்கு சிறப்பான முறையில் சேவை புரிந்த, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடி இளைஞர்களுக்கு, விருதுகள் வழங்கப் படுகின்றன. பழங்குடிக் கலாச்சாரம் தொடர்பாக, கண்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பழங்குடித் தலைவர் பீர்சா முண்டா பிறந்த 150ஆம் ஆண்டை ஒட்டி, நடப்பு 2025ஆம் ஆண்டு, **பழங்குடியினர் பெருமித ஆண்**டாக கடைபிடிக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*சைபர் குற்றம்* (16)

நாட்டில் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், சைபர் குற்றங்களை தடுக்கவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிதித் துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி, இன்று மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதை தெரிவித்தார். டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை வசதிகளில் கட்டாயமாக இடம்பெற வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள் குறித்து முக்கிய அறிவுறுத்தல்களை ரிசர்வ் வங்கி ஏற்கனவே வெளியிட்டு இருப்பதாகவும், குறுந்தகவல் உள்ளிட்ட பல்வேறு விதங்களில் மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க, நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும், அவர் கூறினார். சைபர் குற்றங்களால் பாதிக்கப் படுவோரின் பணத்தை, குற்றவாளிகளுக்கு மாற்றித் தரும் உடந்தை நபர்களை கண்டுபிடிக்க, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுவதாகவும், குறிப்பிட்ட கைபேசியில், குறிப்பிட்ட மொபைல் எண்ணை மட்டுமே பயன்படுத்த முடியும் என்பது போன்ற கட்டுப்பாடுகளால், யுபிஐ மூலமான பணப் பரிவர்த்தனை வசதியில் பாதுகாப்பு வலுப்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

----------------------------

**நாட்டிற்கே முதலிடம்** என்ற, பாரதீய ஜனதாவின் வளர்ச்சிப் பார்வையை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேர்வு குறித்த மாணவர்களின் அச்சத்தை போக்குவதற்கான, பிரதமரின் **பரிக்ஷா பே சர்ச்சா** கலந்துரையாடல் நிகழ்ச்சி, வரும் 10ஆம் தேதி புதுடெல்லி **பாரத் மண்டபத்**தில் நடைபெற உள்ளது.

சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுவது, சர்வதேச உறவுகளில் பொதுவாக ஏற்கப்பட்ட கொள்கைதான் என்று, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், 35ஆவது **காய்- கனி மற்றும் மலர்க் கண்காட்சி**யை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், நாளை தொடக்கி வைக்கிறார்.